**23.11.2022**

**OS.No. 416/2019 PW : 1, திரு. லோகநாதன்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

நான் டீச்சர் ட்ரெயினிங் படித்திருக்கிறேன். வழக்கை தாக்கல் செய்ய நான் தான் விவரம் கூறினேன். 1989ல் 1ம் பிரதிவாதியின் கணவரான கோவிந்தாமி பிள்ளை மீது அ.வ.எண் 573/1989 என்ற ஒரு வழக்கை தாக்கல் செய்தேன். அவ்வழக்கில் உள்ள சொத்து விவரத்தை நான்குமாலில் சர்வே எண் 60/7 குறிப்பிடவில்லை. அவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் சர்வேயர் உதவியுடன் சொத்தை அளந்தார். அதில் சர்வேயர் தாக்கல் செய்துள்ள அறிக்கை என்னிடம் காட்டப்படுவது தான். அது **பி.வா.சா.ஆ.1** ஆகும். அந்த அறிக்கைக்கு அவ்வழக்கில் நான் ஆட்சேபனை தாக்கல் செய்யவில்லை. அந்த அறிக்கையில் 60/7 கோவிந்தசாமி பிள்ளை பெயரில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அது தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. அது தவறு என்ற விவரம் 2008ல் தான் எனக்கு தெரியும். அவர் பெயரில் இருக்கும் விவரம் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபோதே எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. இ, எப். ஜி. எச், ஐ, சி பகுதி அவ்வழக்கில் பிரதிவாதியின் அனுபவத்தில் இருப்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏ, பி, சி, டி பகுதி அடித்தளம் என்று காட்டப்பட்டுள்ளதா என்று கேட்டால் ஸ்கெட் இல்லாமல் என்னால் சொல்ல முடியாது. டி, ஐ, எச், ஜி, எப், இ, எல், ஏ, ஜெ பகுதி நெடுஞ்சாலை துறையினரால் பிளாட் பார்ம் போடப்பட்ட பகுதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண் 60/7ஏ பூமியில் சாலையாக இருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அ.வ.எண்.573/1989

வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலத்திலேயே சர்வே எண் 60/7ஏ எனக்கு பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியும். சர்வே எண் 60/7ஏ-ல் ஆக்கிரமிப்பு இருக்கிறது என்று தெரிந்தும் நான் அவ்வழக்கை நடத்தி வந்தேன். கோவிந்தசாமி பிள்ளை தாக்கல் செய்த அ.வ.எண்.606/1989 வழக்கில் ஆக்கிரமிப்பு இருப்பதாக அவர் பிராதில் கூறியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கேட்டேன். விளம்புகை பரிகாரம் நான் கேட்காததால் என் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. விளம்புகை பரிகாரத்தை மேல்முறையீட்டிலும் கோராமல் அதுவும் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர் மீண்டும் இவ்வழக்கை நாங்கள் தாக்கல் செய்திருப்பது தவறானது என்றால் சரியல்ல. பிரதிவாதி சர்வே எண் 60/7ஏ-ல் ஆக்கிரமிப்பு செய்தவிவரம் உறுதி செய்யப்பட்ட பின்னர் 2வது மேல்முறையீடு செய்யாமல் இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பது செல்லாது என்றால் சரியல்ல. 1983ல் ரோட்டை போட்டு முடித்துவிட்டார்கள். பக்கத்து இடத்துக்காரர்களுக்கு ஆர்ஜிதத்திற்கு நஷ்டஈடு கொடுத்தவிவரம் எனக்கு தெரியாது. என் தந்தைக்கு தெரியும். எனக்கும் தெரியும் என்றால் சரியல்ல. சர்வே எண் 60/7ஏ எனக்கு சொந்தமானது இல்லை என்றும் ஆகவே தான் எனக்கு இழப்பீடு வழங்கவில்லை என்றால் சரியல்ல. இழப்பீடு கேட்டு 2005ம் ஆண்டு தான் நான் ரிட்மனுவை தாக்கல் செய்தேன். 1964ம் வருடத்திய பாக ஆவணத்திற்கு முன்னர் என்

மூதாதையர் பெயரில் சொந்து இருந்ததற்கான ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. 1964ம் வருடம் முதல் நிலத்தை ஆர்ஜிதம் செய்யும்வரை என் தந்தை பெயரில் உள்ள பட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை. என் தந்தை 1986ல் காலமானார். என் தந்தை இறந்தவுடன் நான் என் பெயரில் பட்டா வாங்கவில்லை. உயர்நீதிமன்றத்தில் ரிட் போட்டுதான் பட்டாவை கோவிந்தசாமி பிள்ளை பெயரிலிருந்து என் தந்தை பெயருக்கு மாற்றி பின் என் பெயருக்கு மாற்றினேன். 1989ல் நான் வழக்கை தாக்கல் செய்தபோது பிரதிவாதிகள் 60/3ஐ ஆக்கிரமிப்பு செய்தவிவரம் எனக்கு தெரியும். 1989ல் ஒரு வழக்கை தாக்கல் செய்தபோது 60/3ல் தான் ஆக்கிரமிப்பு இருக்கிறது என்று நினைத்து வழக்கு தாக்கல் செய்தேன். 60/7ல் தான் ஆக்கிரமிப்பு இருக்கிறது என்று 1989லேயே எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என் தந்தையிடமிருந்து கிரைய வாங்கிய சொத்திற்கு பின்புறம் காலியிடம் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி என் மீது அ.வ.எண்.99/2012 என்ற ஒரு வழக்கை தாக்கல் செய்தார். அதற்கு மோகன்ராஜ் என்ற வழக்கறிஞர் மூலம் நான் ஆஜரானேன். அதில் நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் நகல் என்னிடம் காட்டப்படுவது தான். அது **பி.வா.சா.ஆ.2** ஆகும். அதில் சர்வே எண் 60/7 உட்பிரிவு செய்யப்பட்டு 60/7ஏ, 60/7பி, 60/7சி என்று மாறியதாக கூறியுள்ளேன். அதில் 60/7ஏ-ல் கற்பூரவள்ளி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக 7வது பாராவில் குறிப்பிட்டுள்ளேன். 60/7ஏ மற்றும் 60/7சி நெடுஞ்சாலை துறை கையகப்படுத்திக்

கொண்டு பணம் கொடுக்கவில்லை என்று கூறியுள்ளேன். 1989 மற்றும் 2012ல் வழக்கில் தாக்கல் செய்தபோதே கற்பூரவள்ளி என்பவரின் ஆக்கிரமிப்பை அகற்ற நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு மூலத்தை ஏற்படுத்துவதற்காக ஆக்கிரமிப்பு பற்றி 2018ம் வருடம் தான் தெரியும் என்று இவ்வழக்கில் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 99/2012 வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 1ம் பிரிதவாதியின் ஆக்கிரமிப்பு பற்றி நான் ஒப்புக்கொண்ட பின்னரும் 3வருட காலத்திற்குள் ஆக்கிரமிப்பை அகற்றவும், சொத்தின் உரிமைகோரியும் நான் வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 60/3ல் தான் நாங்கள் இருக்கிறோம் என்று 1ம் பிரதிவாதி கூறியதால் நான் வழக்கை தாக்கல் செய்யவில்லை. நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய நிலத்தை ஆர்ஜீதம் செய்தது சம்பந்மதாக 22.09.2008ல் அரசானை நகல் என்னிடம் காட்டப்படுவது தான். அது **பி.வா.சா.ஆ3** ஆகும்.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.